UNIVERSITY OF JAFFNA LIBRARY
RECEIVED 1986
PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 30 ஷவ்வா 4 இதழ் 122

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13-6-1986

● வல்வெட்டித்துறையில்

பதுங்குகுழிகளால்பெருமளவு உயிர்ச்சேதம் தவிர்ப்பு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த இரு தினங்களாக விமானத் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக மேற் கொள்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 'பதுங்கு குழி' களினாலேயே பெருளவு உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காப்பு நடவடிக்கையாக வல்வைப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளை வீட்டுக்கு வீடு முன்னெச்சரிக்கையாக அமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

நெருக்கமான குடிமனைப் பகுதிகளில் விமானங்கள் பலநூற்றுககணக்கான குண்டுகளை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது. ஹெலிகொப்டர்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. ஆயினும் உயிர்ச் சேதம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. சுமார் 5 பேர் வரையே இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்

இதேவேளை வல்வையில்முப்படைகளினாலும் நடத்தப்பட்ட தாக்குதலின் போது ஷெல்களினால் காயமடைந்த மேலும் இருவர் நேற்று மரணமானார்கள்.

வன்னிச்சியம்மன் கோவிலடியைச் சேர்ந்த தேவிகா (17

(5ம் பக்கம் பார்க்க)

மன்னார் மாந்தையில் நேற்று

இராணுவம், விடுதலைப்புலிகள்

நீண்ட நேரடி மோதல்

9 பேர் பலி என அறிக்கை

(அலுவலக நிருபர்)

மன்னாரில் மாந்தைப்பகுதியில் நேற்றுக்காலை முதல் பிற்பகல் வரை இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நீண்டநேரமோதல் ஒன்று இடம்பெற்றது. இதில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டதுடன் 3 பேர் காயமடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அறிக்கையில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் மட்டுமே தமது தரப்பில் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து 35 வாகனங்கள் சகிதம் கால்நடையாக மாந்தைச்சந்தி நோக்கிவந்த இராணுவத்தினர் மீது 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் பலத்த நேரடி மோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் இராணுவத்தினர் தரப்பில் 9க்கு மேற்பட்டோர் பலியானார்கள். பலர்

(6ம் பக்கம் பார்க்க)

50 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முனதினம் திருகோணமலையில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக சுமார் 50 பேர் வரையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். [பி]

கொழும்பிலிருந்து வந்த 450 தபால்பைகள் வவனியாவில் தேக்கம்

[வவனியா]

கொழும்பிலிருந்து வந்துள்ள யாழ்ப்பாணத்துக்கான பெருந்தொகையான தபால்கள் வவனியா தலைமை தபாற்கந்தோரில் தேங்கிக்கிடப்பதாகக் கூறப்படுகின்றது.

சுமார் 450 தபால்பைகள் இவ்வாறு தேங்கிக் கிடக்கின்றன. கிளிநொச்சியில் கடந்த பத்து நாட்களாக இடம்பெற்றுவரும் பிரச்னைகளால் கொழும்பு- யாழ்ப்பாணப் பாதை சீர்குலைந்துள்ளமையே இத்தேக்கத்திற்குக் காரணமாகும். [ரா]

வவனியா வரை மீண்டும் ரயில் சேவை?

[வவனியா]

வவனியா வரை மீண்டும் ரயில் சேவைகளை ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தாம் மேற்கொள்ள விருப்பதாக முப்படைகளின் கூட்டுத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

இம்மாதம் 25ம் திகதி சர்வகட்சி மாநாடு கூட்டணி அழைக்கப்படும்?

(கொழும்பு)

இனப் பிரச்னை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சர்வகட்சி மாநாடு இம் மாதம் 25 ம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான இறுதித் தீர்வை எடுக்கும் பொருட்டு, அடுத்த வாரம் 18 ம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இவ் விடயம் ஆராயப்பட்டு அங்கீகாரம் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கட்சிகளின் சர்வகட்சி மாநாட்டின்போது தமிழர்

(5ம் பக்கம் பார்க்க)

மீண்டும் வெளியூர் தொலைபேசித் தொடர்பு

[யாழ்ப்பாணம்]

கடந்த ஒரு வாரகாலமாக செயலிழந்திருந்த யாழ் குடாநாட்டுடனான வெளியூர் தொலைபேசித் தொடர்புகள் மீண்டும் நேற்றுப் பிற்பகல் 4மணிமுதல் சீரடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி சென்ற தொலைத் தொடர்பு பொறியியலாளர் குழுவினரின் திருத்த வேலைகளின் பின்பே தொலைபேசித் தொடர்பு மீண்டும் இயங்கத் தொடங்கியது எனத் தெரிவிக்கப்பட்டது. [வா]

கடந்த இரு தினங்களில்———

ஜனாதிபதி - டிக்ஸிற் 145 நிமிடம் சந்திப்பு

[கொழும்பு]

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைக் கடந்த இரு தினங்களாகச் சந்தித்துச் சுமார் 145 நிமிட நேரங்கள் பேசினார்.

முதலாவது சுற்றுப்பேச்சு 40 நிமிட நேரமும், இரண்டாவது சுற்றுப் பேச்சு 75 நிமிட நேரமும், மூன்றாவது சுற்றுப்

(5ம் பக்கம் பார்க்க)

தாகூரின் செயலாளர் காலமானார்

[புதுடில்லி]

வங்கக்கவி ரவீந்திரநாத தாகூரின் முன்னாள் இலக்கியத்துறை செயலாளராகவிருந்த கவிஞர் கலாநிதி ஹெமியர் சக்கரவர்த்தி நேற்றுக்காலை சாந்தநிகேதனில் தமது 86 வயதில் மாரடைப்பினால் காலமானார்.

1984ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து திரும்பியது முதல் அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். (பி)

காவலூர் பாடசாலைகள் 16ம் திகதி முதல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள சகல பாடசாலைகளும் 16ம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இப்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் 16ம் திகதி தத்தமது பாடசாலைகளுக்குக் கடமைக்குச் செல்லவேண்டுமென கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். [வா]

கொழும்பு நகரங்களில் குண்டுப் புரளி தொடருகிறது

[கொழும்பு]

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, செட்டியார் தெரு, பழைய சோனகத்தெருப் பகுதிகளில் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாகக் குண்டுப் புரளி கிளம்பியதையடுத்து நேற்றுக்காலை இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

இதேவேளை கொழும்பு 'லேக் கவுஸ்' காரியாலயத்திலும் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த அநாமதேயச் செய்தியைத் தொடர்ந்து அபாயச் சங்கு ஒலித்தது. அப்போது சகல ஊழியர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பலத்த தேடுதல் இடம் பெற்றது.

இச்சம்பவங்களினால் கொழும்பு நகரப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியதுடன் கடைகள் யாவும் உடன் இழுத்து

(5ம் பக்கம் பார்க்க)

குண்டுகளை கண்டுபிடிக்க புதிய ஆணையாளர்

(கொழும்பு)

குண்டுகள வைக்கப்படும் இடங்களை கண்காணித்து அவற்றைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் சிவில் பாதுகாப்பு ஆணையாளர் ஒருவரை அரசு நியமிக்கவுள்ளது.

இப் புதிய நியமனத்தை ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

நாட்டின் இன்றைய நிலைமையையும், குண்டுகள் வெடிப்பது பற்றியும் மக்களுக்கு விசேட செய்தியொன்றை விடுத்த திரு அத்துலத்முதலி, "உரிய பாதுகாப்பை மக்களுக்கு வழங்குவதே அரசின் பிரதான கடமையாகும். இதற்காவே சிவில் பாதுகாப்புக்காக ஒரு புதிய ஆணையாளர் நியமிக்கப்படவுள்ளார்,, எனறு [illegible] ஆணையாளர். [பி]

நெடுந்தீவு ப. நோ. கூவுக்கு மேலதிக கடன்வசதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவின் போக்குவரத்து நிலைமையையும் தற்போதைய நெருக்கடி நிலையையும் கவனத்திற் கொண்டு நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மேலதிக் கடன் வழங்க வேண்டும் என்று அதன் தலைவர் திரு நா. இராமச்சந்திரன் [illegible] பரைக் கேட்டுள்ளதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் தற்காலிக மேலதிகக் கடனாக ரூபா மூன்று லட்சத்து ஐம்பத்தி ஒன்பது ஆயிரம் ரூபாவை வழங்க அங்கீகாரம் அளித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி மா, சீனி என்பனவே இத் தொகையில்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

நல்ல நிலையில் உள்ள சிற்றிசன் ஆங்கில தட்டச்சு இயந்திரம் (1.10v) மின்சாரத்தில் இயங்குவது விபரங்கட்கு: ஆனந் வீடியோ கோம்(Home), சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (C-2828)

இறைச்சிக்கான கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அண்ணாபாம் இணுவில். (A-832)

வகுப்புகள்

108, Brown Road, A/L 88 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்; 14-06-86 சனி 6-30 A. M. (சனி, ஞாயிறு 6-30A.M. செவ்வாய் 4-45 P. M.) (C2783)

A/L 88 பௌதீகவியலில், ஒளியியல் (Light) 15 - 6 - 86 காலை 7- 30ஆரம்பம். ஆசிரியர் திரு. பத்மநாதன். A/L 87 இரசாயனவியலில் Organic Chemistry மாத இறுதியில் ஆரம்பம். ஆசிரியர் திரு மகாதேவா. இடவசதியுண்டு. நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு. (C-2826)

ரேடியோ and டி.வி. (டெக்) வயறிங், வெல்டிங், மோட்டார்மெக்கானிசம், பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புதிய பிரிவுகள் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பமாகின்றன, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-2786

கல்வி

108, Brown Road, A/L 88 இரசாயனம். புதிய பிரிவு ஆரம்பமாகி விட்டது திங்கள், புதன், வெள்ளி 4-45 P. M. ஆசிரியர் சத்தீஸ். (C 2782)

தேவை

கோழிகள் தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணாபாம் இணுவில். (A-831)

தவறிவிட்டது

இளையதம்பி செல்லத்தம்பி மயிலிட்டி வடக்கு என்னும் விலாசம் கொண்ட தேசிய அடையாள அட்டை தெல்லிப்பழை பார் மணியம் லேனில் தாலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பழை கிழக்கு, வசீகரன் ஸ்ரோஸில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 2837)

6-வது நினைவிலிருந்து..

R. A. சமரக்கோன்

பூவுலகப் பிரவேசம்:- 28 - 01 - 1906

விண்ணுலகப் பிரவேசம்: 14 - 06 - 1980

நீங்காதநினைவுகள், நீங்கிவிட்ட கற்பனைகள் நீங்க மறுக்கும் உன் மொழிகள், நீந்தும் எம் விழிகள், நீங்கிவிட்ட உன்விம்பம், நீச்சலடிக்கும் எம் இதயம் தந்தையே!,

நீங்காது, நீங்காது உன் நினைவுகள் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக புனிதஅன்னம்மாள் தேவாலயத்தில் அன்று காலை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,
'லொறற்றோ',
இளவாலை [C2822]

45-ம் நாள் நினைவஞ்சலி

முருகேசு
லோகேஸ்வரன்
(லோகன்)

அல்வின்வீதி-
காரைநகர்.

அன்னைமடியில்:
1960- 01- 07

மண்ணின் மடியில்:
30- 04- 1986

அரசியல் அவலங்கள் அதிகார வெறிபிடித்த ஆக்கிரமிப்பாளர்களால் மனிதப்பண்புகள் மரணித்து விட்ட எங்கள் தேசத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக போராடி உன்னுயிரையே அழித்துவிட்டாய்!

இங்ஙனம்,
தாய், தம்பி, அக்கா,
தங்கைமார், மாமன்,
மாமிமார்,
மைத்துனர்மார்,
அயலவர்,
நண்பர்கள்.

(C 2807)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ். செயலக ஊழியர் அஞ்சலி

[சுண்டுக்குளி

மண்டைதீவுக் கடலில் நேற்று முன்தினம் கறுப்புச் சட்டைக்காரரினால் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவாகட்கு அஞ்சலி செலுத்து முகமாக யாழ். செயலக ஊழியர்கள் செயலகத்திலிருந்து நேற்று முன்தினம் காலை யாழ். பெரிய கோவிலுக்கு ஊர்வலமாக சென்றனர். இவ் ஊர்வலத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும், அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்கமும் கலந்துகொண்டது.

இதனால் நேற்று முன்தினம் 10 மணியின் பின்பு யாழ் செயலகம் ஸ்தம்பித்தது. (க)

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

13- 06- 1986

உயர்திரு.
நாகமுத்து
செல்லையா

(இளைப்பாறிய போஸ்ற் மாஸ்ரர், மானிப்பாய்.)

தந்தையே, பாசமிகு குடும்பத் தலைவனாக நல்வழி காட்டியாக அமைந்து தெய்வம் போல் எவ்வித குறையுமின்றி, எமைக்காத்ததுமன்றி, எத்தனையோ உயிர்களையும் பேணிக்காத்த உத்தமரே, இறைவன்பாத நிழல் அடைந்து இன்றுடன் மூன்றாண்டுகள் ஆனாலும், உங்கள் பாசமிகு பொன்னான புன்னகை தவழும் திருஉருவம் எங்கள் உயிர் இருக்கும்வரை, இதயத்திலிருந்து என்றுமகலாது பப்பா. நாம் போற்றும் கோயில், நீங்களன்றி வேறுஒன்றுமில்லை. ஒரு நிமிஷமேனும் எங்களை விட்டுப் பிரிந்திருக்க மாட்டீர்களே. இப்ப எங்களை நிரந்தரமாகப் பிரிந்து சென்றுவிட்டீர்களே. நீங்கள் இருந்தபோது தெய்வமாய் உங்களை எல்லோரும் மதித்தார்களே இன்று அத்தெய்வம் இல்லையே எனவருந்துகிறார்கள். தந்தையாக உங்களைப் பெற்ற நாம் பெரும் தவம் செய்தோம் பெருமை பெற்றோம். எங்கள் இல்லத்தில் ஓரிடம் நிரப்பமுடியாத இடைவெளியானாலும் எங்கள் உள்ளத்தில் நிரந்தரமாக வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றோம். உங்கள் பொன்னான திருமுகத்தை இனி எப்போ காண்போம். எங்களுடன் நீங்கள் வாழ்ந்த இனிய பொன்னான நாட்களை எங்களால் மறக்க முடியவில்லையே பப்பா! நீங்கள் தெய்வமாய் இருந்து எங்களை சரியான பாதையில் வழிநடத்துவீர்கள் என்ற நம்பிக்கையில், எங்கள் அன்பு மலர்களை உங்கள் பொற்பாதத்தில் சமர்ப்பித்து எல்லாம் வல்ல இறைவனை உங்கள் ஆத்மா சாந்தி அடையும் வண்ணம் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளை.

(C2834)

7 வது சிராத்ததினம்

அமரர் இளையதம்பி இராசரத்தினம்

(இளைப்பாறிய தபால் அதிபர், கொழும்பு)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை வாழவைத்த தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு மறைந்து 7 ஆண்டுகளென்ன 7 யுகம்சென்றாலும், உங்களையே நினைத்து உயிர் வாழ்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

அன்புமனைவி இரத்தினம்,
மகள் திருமதி காயத்திரி,
மகன் பாலச்சந்திரன் (ஜெர்மனி)
மகன் சிவயோகநாதன் (பிரான்ஸ்),
மருமகன் சோமசுந்தரம்,
அன்புப்பேரப்பிள்ளைகள்,
அகிலினி, திஷாந்தினி, சுகந்தினி.

சேச்லேன்,
கொக்குவில்.

(C2840)

மீனவர் படுகொலை

யாழ் வை. எம். சி ஏ. அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

ஒரே கிராமத்திலிருந்து தமது உழைப்புக்காகச் சென்ற முப்பது கிறிஸ்தவ தமிழ் மீனவர் ஒரே நாளில் அகாலமாக உயிரிழந்த செய்தி எமக்கு மிக வருத்தத்தையும் கலக்கத்தையும் தருகின்றது.

குருநகர் கடற் தொழிலாளர் படுகொலை செய்யப்பட்டது குறித்து யாழ். வை. எம். சி. ஏ. வெளியிட்ட அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது: மீளாத்துயரில் அமிழ்ந்திருக்கும் குருநகர் மக்களுக்கும் அன்பானவர்களை இழந்து துடிக்கும் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது. இறைவன் வல்லவர், நல்லவர் இக்குடும்பங்களுக்கு வேண்டிய மனத்தைரியத்தையும் இறந்தவர்களின் ஆத்மாவுக்கு மோட்சத்தையும் அருள்வாராக. (க)

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்ல விரும்புபவர்களுக்கும் மத்திய கிழக்கில் சாரதிகளாக, பணிப்பெண்களாக தொழில்புரிய செல்பவர்களுக்கும் விரைவான பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: மல்ரி சேவிசஸ்,
37 (351), மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகில்), யாழ்ப்பாணம். (C2839)

மனையியல் கண்காட்சியும் விற்பனையும்

கேக் ஐசிங், பூ வேலை, கைவேலை, சமையல், தலையலங்காரம், தையல், கோலம், வர்ணம்.

காலம்: ஜூன் 14-ம் 15-ம், 16-ம் திகதிகளில் காலை 9-00 முதல் மாலை 6-00வரை.

இடம்: GS லேடிஸ் அக்கடமி,
இல 57, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(C 284) பிரவேசம் ரூபா 5/-

முக்கிய அறிவித்தல்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (15–6–86) காலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும். அரசாங்க பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

மு. சி. சண்முகராசா,
செயலாளர்.

(A 728)

கனடா—டென்மார்க் பிரயாண ஒழுங்குகள்

கனடா, டென்மார்க் ஆகிய இடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன் சவூதி அரேபியாவுக்கு தச்சு வேலை தொழிலாளர் பதவிக்கு வெற்றிடங்கள் குறிப்பிட்டளவு கையிருப்பில் உண்டு.

மற்றும் பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:- N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பிற் குறிப்பு:- (பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை) [C-2812]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வன்முறைகள்; பத்துப் பேர் மரணம்

15 சீக்கியர் கைது

சண்டிகார் ஜூன் 11

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது பத்துப் பேர்வரை இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.

பஞ்சாப்பிற்கும் அதன் அண்மையிலுள்ள ஹரியானா மாநிலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிலப்பிரச்னை உக்கிரம் அடைந்து வரும் கட்டத்திலே நடந்த வன்முறைகளின் போது இந்த பத்துப் பேரும் மரணமானார்கள்.

15 பேர் கைது

இச்சம்பவங்களின் போது சீக்கிய தீவிரவாதிகளின் மறைவிடங்களை முற்றுகையிட்ட பொலிஸார் சுமார் 15 சீக்கிய தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளனர்.

நடுநிலைமைக் கொள்கையுடைய சீக்கியர்களுடன் தாம் கடந்த வருடம் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றின் படி இம்மாதம் 21-ம் திகதி சண்டிகாரைப் பஞ்சாப்பிற்கு கையளிக்க பிரதமர் திரு. ராஜீவ்காந்தி உறுதியளித்திருந்தார்.

எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

இத்தினத்தில் பரவலான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக ஹரியானாவிலுள்ள எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகரான சண்டிகாரை பஞ்சாப்பிற்கு கையளிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்னை பற்றிய அறிக்கையொன்று திரு. ராஜீவ் காந்தியிடம் காணி ஆணைக்குழுவினால் ஏற்கனவே கையளிக்கப்பட்டது.

உள்துறை மந்திரி ஆலோசனை

இதேவேளை சண்டிகாரை பஞ்சாப்பிற்கு மாற்றி தருவது தொடர்பான வழிமுறைகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் நேற்று புதுடில்லியில் உயர் நிலை மட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது.

இந்த விஷயம் தொடர்பாக உள்துறை மந்திரி திரு. பூட்டாசிங் பஞ்சாப் மற்றும் ஹரியானா முதலமைச்சர்களோடு ஆலோசனை நடத்தினார்.

மந்திரிசபைக்கமிட்டி கூடியது

வெங்கட்ராமய்யா கமிஷன் தெரிவித்துள்ள பரிந்துரைகளை பரிசீலனை செய்வதற்காக அரசியல் விவகாரம் குறித்த மத்திய மந்திரி சபைக் கமிட்டியும் நேற்றைய தினம் கூடி ஆலோசனை நடத்தியது.

சண்டிகாருக்குப் பதிலாக ஹரியானாவிற்கு மாற்றப்படும் பஞ்சாப்பின் ஹிந்தி மொழி பேசும் பகுதிகளை கண்டறிவதற்காக இந்தக்கமிஷன் நியமிக்கப்பட்டது.

சுர்ஜித்சிங் கட்சிப்பிரநிதிகள் சந்திப்பு

இதேவேளை ஷிரோமணி அகாலிதள் லோங்கவால் முவின் தலைவர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா இந்த மாதம் 20-ம் திகதியன்று அமிர்தசரஸில் கட்சிப் பிரதிநிதிகளின் அவசர கூட்டமொன்றை கூடவுள்ளார்.

சண்டிகாரைப் பஞ்சாப்பிற்குமாற்றுவது பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுவதுடன் மாநிலத்தின் தற்போதைய நிலை குறித்தும் இந்தக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும். [து)

திருநெல்வேலி கலாமன்ற ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய சமய அபிவிருத்திச் சங்க 29 வது ஆண்டு விழாவும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் படத்திறப்பு விழாவும் இன்று மாலை கலாமன்ற மண்டபத்தில் உடுவில் உ. அ. அதிபர் திரு. அ. மகாலிங்கம் தலைமையில நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பல சிறப்புரைகளும், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

ஆண்டுவிழா

[கரவெட்டி]

வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் நாலாம் ஆண்டு நிறைவு விழா 15 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வதிரி வடக்கு மெதடிஸ்தமிசன் பாடசாலையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக திரு கே. கதிரமலையும், வைத்தியக்கலாநிதி எம். கே. முருகானந்தனும் கலந்து கொள்வார்கள்.

சிறப்புவிருந்தினராக மிருக வைத்தியக்கலாநிதி எம். தங்கராசா, எம். தம்பிப்பிள்ளை [நிர்வாக அலுவலர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு], திரு. சி. திரவியம் [உதவி அதிபர் வதிரிதேவரையாளிக்கல்லூரி], திரு கே. திவ்வியராசா [பனை அபிவிருத்திச்சபை] ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்தியப் பாராளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய 1500 இந்துக்கள் கைது

(புதுடில்லி)

சுமார் 1500 இந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் புதுடில்லியில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பஞ்சாப்பில் கடந்த வாரத்தில் சீக்கியத் தீவிரவாதிகளால் பதின்மூன்று இந்துக்கள் கொலை செய்யப்பட்டதை கண்டித்து இந்தியப் பாராளுமன்றத்திற்கு முன்பாக இந்துக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர். அப்பொழுதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஜனதாக் கட்சித்தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பஞ்சாப்பில் இந்துக்களைக் காப்பாற்ற உடனடியாக இராணுவ ஆட்சியை அமுல் நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த மூன்று மாதங்களில் சுமார் 250 இந்துக்கள் பஞ்சாப்பில் கொலை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

"உலகக் கிண்ண" உதைபந்தாட்டம்: மெக்ஸிக்கோ, இங்கிலாந்து, பரகுவே கோஷ்டிகள் வெற்றி

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோவில் நடைபெறும் "உலகக் கிண்ண" உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் இங்கிலாந்து, மெக்ஸிக்கோ, மொரக்கோ ஆகிய நாடுகளின் கோஷ்டிகள் வெற்றிபெற்றுள்ளன.

மேற்படி போட்டியின் 2வது சுற்றில் விளையாட மெக்ஸிக்கோ, பெல்ஜியம், பரகுவே, மொரக்கோ ஆகிய கோஷ்டிகள் தகுதி பெற்றுள்ளன.

இங்கிலாந்து வெற்றி

இங்கிலாந்துக்கும். போலந்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து சிறப்பாகவிளையாடி 3-0கோல்களால் வெற்றிபெற்றது.

மெக்ஸிக்கோவுக்கும், ஈராக்குக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மெக்ஸிக்கோ 1-0 கோலால் வெற்றிபெற்றது.

மொரக்கோவுக்கும், போர்த்துக்கல்லுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மொரக்கோ 3-1 கோல்களால் வெற்றிபெற்றது.

பெல்ஜியத்துக்கும் பரகுவேக்குமிடையில் நடைபெற்ற கடும்மோதலில் இருகோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இன்றைய ஆட்டங்கள்

குறூப் E- மே. ஜேர்மனி எதிர் டென்மார்க்.

குறூப் E- உருகுவே எதிர் ஸ்கொட்லன். (வி)

இன்றைய பலன்

மாதம்: வைகாசி
திகதி: 30 [1986 - 6 - 13]
கிழமை: வெள்ளி
திதி: ஷஷ்டி பி. இ வரை
நக்ஷத்திரம்: ஆயிலியம் காலை 6-00ன் மேல் மகம்

மேடம்: வாழ்க்கையில்தென்றல் வீசும், முதியவர்கள் உங்களுக்கு ஆதரவு தருவார், குழந்தையொன்றின்முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்

இடபம்: அதிக நம்பிக்கை ஆபத்தை தேடித்தரலாம், தன் கையே தனக்குதவியென்று செயலாற்றவும், மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள்.

மிதுனம்: இரக்கசிந்தை மேலோங்கும், பிறருக்கு உதவுவதில் பெருமகிழ்ச்சியடைவீர்கள், முன்னாள் ஆசிரியர் ஒருவரின் சிபார்சுக் கடிதம் நல்லபலனை அளிக்கும்.

கடகம்: தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றும், மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடும், பிரயாணத்தின் போது அவதானம் வேண்டும்.

சிங்கம்: வசதியாகவாழ்க்கை நடக்கும், எதிர்த்தவர்களே இன்று உங்கள் ஆதரவைநாடி வருவார்கள், குடும்ப வாழ்க்கையில் அமைதிநிலவும்.

கன்னி: தற்பெருமை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும், பொருளும் பலவழிகளில் செலவாகும், கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றும்.

துலாம்: எதிலும்தயக்க நிலை தென்படும், நண்பர்களும் குறைகூறுவார்கள், பொருளாதாரத்துறையில் மந்தநிலை தென்படும், உணவுவிடயத்தில் கவனம் வேண்டும்.

விருச்சிகம்: மனம் நிறைந்த சம்பவங்கள் இடம் பெறும், பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும், தவிடப்பட்ட பணவரவு மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு.

தனுசு: இனந்தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள், வாய்வுப்பதார்த்தங்கள் தவிர்க்கப்படல் வேண்டும், சகோதரவழியாலும் கவலை தோன்றும்.

மகரம்: திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்கும், சிரமமானகாரியங்களையும் இலகுவாகச் செய்து முடிப்பீர்கள், தங்கள் திறமை சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

கும்பம்: மகிழ்ச்சி தரும் செய்தியொன்று கிடைக்கும், பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், அறவழிகளிலும் நாட்டம் பிறக்கும்.

மீனம்: மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபடவும், எச்சந்தர்ப்பத்திலும் அவசரப் போக்கைத்தவிர்த்துக் கொள்ளவும், இன்று நீண்டதூர பிரயாணங்களைப் பின்போடுவது நன்று.

திருமலை ரவீந்திரன்

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜெர்மனி, கனடா செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு, (மகளிர் கல்லூரி அருகாமை), மானிப்பாய். [A 729]

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ மத்திய கிழக்கு நாடுகளுக்கு

உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

★ லிபியா ★ குவைத்
★ சிங்கப்பூர் (பணிப்பெண்கள்)

அத்துடன் பாஸ்போட், BOND. ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

Universal Agencies

125, (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்.)

(C 2827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கழனிகளிலே களைபிடுங்க இறங்குகிறவன், முதலில் களைஎது பயிர்எது என்று தெரிந்து கொள்ளவேண்டும். இல்லையானால் பயிரையே களைஎன்று கருதிப் பிடுங்கிவிடுவான்.

— பெர்னாட்ஷா

நமது நோக்கு

இந்திய மத்தியஸ்தம் விலக்கப்பட்டால்?

"நான் சில யோசனைகளை முன்வைத்துள்ளேன். எனக்குமுன் பதவியிலிருந்தவர்கள் வழங்க முன்வந்தவைகளைவிட இவை அதிகமானவை ஓரளவு சமஷ்டி அமைப்பொன்றை வழங்க நான் தயாராய் உள்ளேன்; அவ்வளவுதான் அதற்கு மேல் போகமாட்டேன் இந்த யோசனைகள் ஏற்கப்படா விட்டால் படைகளை கட்டவிழ்த்து விடுவேன்.''

இவ்வாறு கடந்த மாதம் 11-ம் திகதி லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த பேட்டியொன்றில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியிருந்தார்.

ஒரு ஜனநாயக நாட்டின் தலைவனிடமிருந்து இப்படியான ஒரு பயமுறுத்தல் நிச்சயமாக வரமுடியாது.

அதிகாரங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டுவிட்ட சர்வாதிகாரி ஒருவர் தனக்கு அடிமையாகியுள்ள மக்களைப் பார்த்துக் கூறும் வார்த்தைகள் அல்லவா இவை!

இந்திய இணை அமைச்சர் திரு. சிதம்பரம் தலைமையில் இலங்கைவந்த குழுவினர் திரும்பிச் சென்றதின் பின்னரே திரு. ஜெயவர்த்தனா மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தார். சிதம்பரம் குழுவின் மூலம் அவர் அனுப்பியிருந்த புதிய யோசனைகளின் விபரம் இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால் அந்த யோசனைகள்பற்றி இந்தியப் பத்திரிகைகளில் வெளியிட்ட தகவல்களிலும் இந்தியப் பாராளுமன்றத்தில் விடுக்கப்பட்ட அறிக்கைகளிலுமிருந்து அதில் சிக்கலான பல இடைவெளிகள் காணப்படுவது பகிரங்கமாகியுள்ளது.

இந்த இடைவெளியை எவ்வண்ணம் நிரப்புவது என்பது பற்றிய விளக்கங்களை இந்திய அரசு கோரியிருப்பதும், அது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜயவர்த்தனாவை அடிக்கடி சந்தித்துப் பேசுவதும் நடைபெற்று வரும் விடயங்கள்.

இதேவேளை பெரும் எடுப்பில் துருப்புக்கள் தமிழப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு ராணுவமுகாங்களுக்கிடையிலான பாதைத் தடைகள் அகற்றப்படும் சாட்டில் கடந்தமாதம் 17ம் திகதி தொடக்கம் பெரும் தாக்குதல் ஒன்று முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் ஆயுதப்படையினர் சாதாரணமாகப் பயன்படுத்தும் ஆயுதங்கள், வாகனங்கள், கருவிகள் பட்டுமன்றி இரண்டு நாடுகளுக்கிடையில் நடைபெறும் பாரியயுத்தம் போன்று பொதுமக்கள் வாழும் பகுதிகளில் 'ஷெல்' குண்டுகளாலும் ஹெலிகொப்டர்களாலும் மட்டுமன்றி போர் விமானங்களைக் கொண்டு நாசகார குண்டுகள் வீசியும் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இதன் தொடர் நிகழ்ச்சியாக நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறையில் நடந்துள்ள சம்பவங்களை எமது நிருபர் நேற்றைய எமது ஏட்டில் விபரமாகத் தந்துள்ளார்.

'இரண்டு நாட்களாகநடந்தபொம்பர், பீரங்கி,தாக்குதலால் இரு சிறுவர்கள்உட்பட மூவர் பலியானார்கள், பெண்கள், வயோதிபர், சிறுவர் உட்பட 80 பேர் காயமடைந்தனர். 75 வீடுகள் பலத்தசேதமுற்றுள்ளன''.

இப் பகுதிகளில் தரித்து நின்ற ஐந்து பீரங்கிப் படகுகளிலிருந்தும் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி மாறிமாறி பீரங்கி, ஆர்ட்டிலறி, மோட்டார் ஷெல் போன்ற பலரக தாக்குதல்கள்நடத்தப்பட்டதாகவும் செய்தி கூறுகின்றது.

இதனிடையில் கடந்த செவ்வாயன்று குருநகரிலிருந்து மண்டைதீவுக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 30 பேருக்கு மேற்பட்ட அப்பாவி மீனவர்கள் கறுப்புச் சட்டை பயங்கரவாதிகளால் வெட்டியும், குத்தியும் கோரப்படுத்தப்பட்டும் சுட்டும் கொலை செய்யப்பட்ட சம்பவமும் மக்களை உலுக்கியுள்ளது.

இத்துடன் முடிந்து விட்டதா? இனியும் தொடருமா?

மேலே சுட்டிக் காட்டிய ஜனாதிபதியின் பேட்டியின்படி ''ராணுவத்தைக் கட்டவிழ்த்து விடும்''.

படலை தான நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது எனக் கொள்வதானால் அவர் மனம் மாறும் வரை இது தொடரும் என்றே சொல்லவேண்டும்.

ஆனால் அவர் மனம் எப்போது மாறப்போகின்றது?

''தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்கு நான் விட்டுகொடுத்தால் எனது சொந்த சிங்கள மக்கள் வெகுண்டெழுவார்கள் அவர்களின் சுயாட்சிக்கான கோரிக்கைக்கு இணங்காவிட்டால், அவர்கள் குண்டுவைக்கிறார்கள், அவர்களுக்கு எதிராகச்சடுமையாக நடந்து கொண்டால் இனக்கொலைச் செய்கிறேன் என்கிறார்கள்''.

இவ்வாறுகுழம்பிப் போய் இருக்கும் ஜனாதிபதியினால் சிங்கள மக்கள் வெகுண்டெழுவதற்கு இடம் கொடுக்க மனம்வராது; அவர்கள் திருப்திகொள்ளும் விதத்தில் தொடர்ந்தும் கடுமையான ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவே விரும்புவார். அவ்வாறாயின் தமிழ்த் தீவிரவாதிகளை ஒழிக்கும் கட்டும் அவரது நோக்கம் எப்போது நிறைவுபெறும்?

திரு. ஜயவர்த்தனா நிறைய படித்தவர், அரசியல் ஞானி என்று அவரது கட்சியினரால் போற்றப்படுபவர். நாட்டின் முதிய (79 வயது சிங்களத்தலைவர். எனவே நியாயபூர்வமான தமது ஜீவாதார உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் எவராய் இருந்தாலும், இழப்புக்கள் என்னவரினும் ஒருபோதும் தளர்ந்து விடமாட்டார்கள். என்றோ ருநாள் தாம் இழந்த உரிமைகளுடன் தலைநிமிர்ந்து நிர்ப்பதற்காகத் தொடர்ந்தும் போராடவே செய்வார்கள் என்ற வரலாற்று உண்மை அவருக்குத் தெரியாமலிருக்காது.

இந்நிலையில் நாட்டில் வன்செயல்கள் அதிகரித்திருப்பதையும், அமைதி முறையில் தீர்வுகாண்பதில் இலங்கை அரசு அக்கறை கொள்ளாதிருப்பது குறித்தும் இந்திய பிரதமர் மீண்டும் கவலை தெரிவித்திருக்கிறார். இந்தியா மேற்கொண்டிருக்கும்மத்தியஸ்த முயற்சியைக் கைவிட நேரலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்தியஸ்தம் விலக்கப்படுமானால் இவ்விடயத்தில் அதன் எதிர்கால நிலைப்பாடு என்னவாய் இருக்கும்? மிகவும் அர்த்தமுள்ள கேள்வி இது.

இலங்கை அரசு இந்த எச்சரிக்கையை வெறும் வார்த்தைகளாக எண்ணி [illegible] மட்டும் இப்போது [illegible] வைப்போம்.

'எரிக்கப்பட்ட ஓய்வூதிய பட்டியல்கள் ஈடுசெய்யப்படும்'

—அரசஅதிபர்

(யாழ் பாணம்)

''அண்மையில் நடந்தேறிய சில நிகழ்வுகளால் ஜூன் மாத ஓய்வூதியத்தை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திகதிகளில் வழங்க இயலாதுளளது. ஆயினும் எரிந்த கம்பியூட்டர் ஓய்வூதியப் பத்திரங்களை ஈடுசெய்யும் வகையில் மேலதிக பிரதிகள்பெற அதற்குரிய ஸ்தாபனத்துடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' இவ்வாறு, ஓய்வூதியம் பெறுபவர்க்கு யாழ். அரச அதிபரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

அவ் வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் இடைவிடாது எடுத்து வந்த முயற்சியின் பயனாக 1986 ஜூன் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுப் பட்டியல்கள், ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்கள் மற்றும் ஆவணங்கள் யாவும் கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்டு கொழும்பிலிருந்து வாகனத்தில் எடுத்துவரப்பட்டபோது பரந்தனில் இம்மாதம் 4-ம் திகதி ஏற்பட்ட அசம்பாவிதத்தினால் முற்றாக எரிந்து விட்டன. அத்துடன் இவ் வாகனத்தில் கொண்டுவரப்பட்ட செயலகத்திற்குரிய ஏனைய உணவு முத்திரைகளும் படிவங்களும், உடமைகளும் எரிந்து சாம்பலாகியதுடன் உயிர் இழப்புக்களும் நேர்ந்துள்ளன. இவை துர்அதிஷ்டமானவை.

'' ஜூன் மாத ஓய்வூதியப் பத்திரங்கள் எரிந்து விட்டமையால் ஓய்வூதிய ஆவணங்கள் முழுவதும் இல்லாமற் போய்விட்டன, என்பது அர்த்தமல்ல. யாழ் மாவட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு சம்பந்தமான தரவுகள் யாவும் கம்பியூட்டர் பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டு மிகவும் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. ஜூன் மாதத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலதிக ஓய்வூதியக் கொடுப்பனவு பட்டியல்களும் ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்களும் பெறவேண்டியுள்ளன. இவற்றைப் பெறுவதற்கு சில நாட்கள் செல்லும் இக்கால தாமதத்தால் ஓய்வூதியம் பெறுவோர்க்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்தும் அதே வேளையில் அவர்களும் இவ் எதிர்பாரா நிகழ்வுகளால் ஏற்பட்ட விளைவுகளை பெரும் மனத்துடன் தாங்கிக் கொண்டு எனக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குவார்களென எதிர்பார்க்கிறேன். ஜூன் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு திகதிகள் காலக்கிரமத்தில் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

(5-ம் பக்கம் பார்க்க)

"சுமுகத் தீர்வுக்குப் பதிலாக இன அழிப்பு நடக்கிறது"

குருநகர் மீனவர் கொலை பற்றி கண்டனம்

[யாழ்ப்பாணம்]

அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு காண்பதற்குப் பதிலாக தமிழ் மக்களை இல்லாதொழித்து விடுவதற்கான இனப்படுகொலையையே மேற்கொண்டு வருவதாகக் கருதுகின்றோம் என சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒரு தீர்மானத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

குருநகர் மீனவத்தொழிலாளர் 34 பேர் மண்டைதீவு கடற்கரையில் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதையொட்டி யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நேற்றுக் காலை 10 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் வண. பிதா பிரான்சிஸ் யோசப் அவர்களின் தலைமையில்கூடி ஆராய்ந்தது. கூட்ட ஆரம்பத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலிசெய்யும் முகமாக இரண்டுநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ''அரச பயங்கரவாதத்தின் வடிவமான ஆயுதப்படையினரின் இந்தக் குரூரமான படுகொலைகளை இச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. நிராயுதபாணிகளான இந்த அப்பாவி ஏழை மீனவத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைக் கஷ்டத்தின் நிமித்தம் கரையோரப் பகுதிகளிலாவது மீன் பிடித்து சிறிய வருமானத்தை தேடிக்கொள்ளச் சென்றவர்கள் மிருகத்தனமான முறையில் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இந்தக் கொடூரமான படுகொலைகள் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குச் சுமுகமான தீர்வு காணபதற்குப் பதிலாக தமிழ் மக்களை இல்லாதொழித்து விடுவதற்கான இனப்படுகொலையை மேற்கொள்வது எமக்குப் புலப்படுகிறது''.

பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு ரூபா 15,000/- நிதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிதியின் பெயரில் கூட்டத்திலே பங்கள் பங்களிப்பையும் சிலர் வழங்கினார்கள். அவர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் 3,000/- உப தலைவர்: டாக்டர் ஜே. பி சி பிலிப்ஸ் 2 000/- திரு. எஸ். அருளானந்தம் 1,000/- திரு. டி எஸ். ஞானப்பிரகாசம் 1,000/- திரு பி. சி. அன்ரனி 1,000/- திரு வி. ஏ ஜே விஜயரட்ணம் 500/- திரு. ஆர் பிரான்சிஸ் 250/.

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் ''திருநல்வேலி'' என புகழப்பட்ட திருநெல்வேலியில் அமைந்த கலாமன்றம் இற்றைக்கு முப்பத்தெட்டு ஆண்டுகட்குமுன் ஆரம்பிக்கப்பட்டு திருநெல்வேலி மக்களுக்கும், சமயத்திற்கும் பல வழிகளில்தொண்டாற்றி வந்துள்ள இம் மன்றத்தின் பன்முகப்பணி பல அயலூரவராலும் போற்றப்பட்டுள்ளது. சமய அபிவிருத்தி சங்கம் அமைத்துசமயத் தொண்டாற்றி வருகிறது. பலசமய பெரியார்களை அழைத்து (தமிழகம் உள்ளிட்டு) சிறப்புரைகள் நடாத்தியும், சமய போட்டிகள், தண்ணீர் பந்தல்கள் அமைத்தும்தொண்டாற்றி வருகிறது

கலாமன்ற நிலையத்தின் சார்பில் 1956ம் ஆண்டு வைகாசிமாதம் 29ம் திகதி திருமதி சி. அநவரதவிநாயகமூர்த்தி அவர்களால் ஒரு பிரார்த்தனைக்கூட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. நடனமூர்த்தியாகிய நடராஜா மூர்த்தியை துணைகொண்டு பிரார்த்தனைக் கூட்டம் அன்று தொடக்கம் இன்றுவரை வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் தவறாது நடைபெற்று வருகிறது. வருடந்தோறும் இப்பிரார்த்தனை தொடங்கிய தினத்தை முன்னிட்டு ஆண்டு விழா வினை மிகவும் சிறப்பாக கொண்டாடிவருகிறது

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எம்மன்றத்தின் அயலில்வாழ்ந்துவந்தது எமக்கு மிகவும் பெருமையையும் தைரியத்தையும்தந்தது. அவர்களின் ஆசியுடனும் கூறிவுடனும் செயல்பட்டோம். கடந்தகாலங்களில் அன்னார் இருந்து சிறப்பித்த எமது ஆண்டுவிழா இம்முறைஅவர் இல்லாமல் நடைபெற வேண்டியுள்ளது. எமது மன்றத்திற்கும் எமக்கும் ஓர்பேரிழப்பே. ஆயினும் இம்முறை அவர்களின் திருவுருவப்படத்தை எமது மன்றத்தில் திறந்து வைப்பது நாம் எமது மனத்தைசற்று ஆறுதலடைய செய்கிறது.

இனிவரும் காலங்களிலும் நாட்டின் நிலைஎப்படி இருப்பினும் எமதுமன்ற நிர்வாக சபை உறுப்பினரும் அங்கத்தினரும் தொடர்ந்தும் சமய சமூக பணிகளில் ஈடுபட்டு எமது மன்றத்திற்கும் எமது கிராமத்திற்கும் தொண்டாற்றுவோம் என உறுதி செய்து கொள்வோம்.

திருமதி ரோகினி விஜேந்திரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். இந்து மகளிர் கல்லூரியில்
நால்வர் திருவுருவப்படம் இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி நால்வர் திருவுருவப்பட அங்குரார்ப்பணவிழா இன்று காலை கல்லூரி மண்டபத்தில், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு வ. நாகலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஆசியுரையை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லூர் வட்டாரக்கல்வியதிகாரி திரு. சிவநாயகமூர்த்தி, சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா ஆகியோர் வழங்குவார்கள். தொடக்கவுரையை யாழ். பிரதம கல்வியதிகாரி திரு. குசோமசுந்தரமும், வரவேற்புரையை கல்லூரி அதிபர் செல்வி ப. இராமநாதனும் வழங்குவார்கள். தொடர்ந்து கல்லூரி மாணவிகளின் பண்ணிசைநிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

கடைசிநேர வரிவிளம்பரம்

தவறிவிட்டது

வயித்திலிங்கம் பத்மா அகதி முகாம் கைதடி என்று முகவரியையுமுடைய எனது அடையாள அட்டை கைதவறிவிட்டது. அதைக்கண்டெடுப்பவர்கள் தயவு செய்து கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு ஒப்படைக்கவும் வயித்திலிங்கம் பத்மா, புதிய வீடமைப்புத் திட்டம், மறவன்புலோ, சாவகச்சேரி.

[C-2851)

திருமதி ஞானபூரணி சிவராமலிங்கபிள்ளையின் அடையாள அட்டையும் 236620533V பென்சன் காட்டும் 31658. 12-6-86 பி.ப தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 28 குமாரசாமி வீதி சந்தர் மடத்தில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C-2852]

முஹமட் அமீன் ஆஷிக் அவர்களின் அடையாள அட்டை 612010897V தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் நபிஸா ஜுவலர்ஸ் 171, கஸ்தூரியார் வீதி. [லிடோ தியேட்டர் சந்தி] யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்

[C-2855]

லிடோ

காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ்
நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

வெலிங்டன்

10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர்
நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிபேட்டி சினிமாவில்

[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Bygerald seymour
நடித்த
Harrys Game

அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு பயங்கரவாதிகளை அழிக்க முயற்சிக்கும் பயங்கரபோர்நுட்பங்களை கண்டு களியுங்கள்.

(கண்டிப்பாக வயது வந்தோர்க்கு மட்டும்)

10-30, 2-30, 4-30, 6-45

[ஒறிஜினல் பிரதி]
1986ம் ஆண்டு வெளியீடு

நெடுந்தீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பு வைக்கப்படும். இவ் இருப்பு விபரங்களை மேற்பார்வை செய்து ஒழுங்காக உணவுப் பொருட்களைபாவனையாளர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்யும்படியும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கேட்கப்பட்டுள்ளார்.

எரிக்கப்பட்ட...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜூலை மாதத்திலிருந்து சகல ஒய்வூதியக் கொடுப்பனவுகளும் அட்டவணைப்படி நடைபெறுமென உறுதிகூற விரும்புகின்றேன்.

''புதிய திட்டத்தின் படி வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுவோரின் ஒய்வூதியப் பற்றுச் சீட்டு அவர்களது தனி பட்ட விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் அவர்கள் அப்பத்திரத்தை முறைப்படி பூர்த்திசெய்தத் துதுதம வங்கிகளில் ஒப்படைக்க வேண்டும்,

''அஞ்சல் அலுவலகங்கள் மூலமாகவும், இலங்கைவங்கி கச்சேரிக்கிளை மூலமாகவும் ஒய்வூதியப்பணம் பெறுபவர்களுக்கு ஒய்வூதியப் பற்றுச் சீட்டுக்கள் நேரடியாக அவர்களுக்கு வழங்கப்படும். அவர்கள் அப்பற்றுச்சீட்டை பூரணதி செய்து அஞ்சல் அதிபர் அல்லது வங்கி முகாமையாளருக்கு நேரடியாக ஒப்படைத்து ஒய்வூதியப்பணத்தை பற்றுக்கொள்ளலாம். கம்ப்யூட்டரில் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டில் ஒய்வூதியம் பெறுபவரின்பெயர், விலாசம், ஒய்வூதிய இலக்கம். வங்கிக் கணக்கு இலக்கம் என்பவற்றுடன் வழங்கப்பட விருக்கும் ஒய்வூதிய விபரங்கள் யாவும் அடங்கியிருக்கும்.

''குறிப்பிட்ட ஒரு மாதத்தில் ஏதாவது ஒரு மாற்றம் அல்லது திருத்தம் செய்யவிரும்பும் ஒய்வூதியக் காரர் முதல் மாதத்தில் 5ம் திகதிக்குமுன்னதாக அவ்வித அறிவித்தலை எனக்குக்கிடைக்கக் கூடியதாக செய்தல் வேண்டும். உதாரணமாக 86 செப்டம்பரிலிருந்து தனது ஒய்வூதியத்தை வங்கி ஒன்றிற்கு மாற்ற விரும்பும் ஒருவர் தமது வேண்டுகோளை 86 ஆகஸ்ட் 5ம் திகதிக்குமுன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். இவை பற்றிய மேலதிக விபரங்கள் காலக்கிரமத்தில் அறிவுறுத்தப்படும்.

''யாழ். கோட்டையில் வங்கிமூலமும், அஞ்சல் அலுவலக மூலமும் தங்கள் ஒய்வூதியத்தைப் பெறுபவர்கள் தாங்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளனர். அஞ்சல் அலுவலகங்கள் மூலமும், கச்சேரி இலங்கை வங்கிக்கிளை மூலமும் ஒய்வூதியம் பெறுவோர் இதில் அடங்குவர். ஏற்கனவே என்னால் அறிவுறுத்தப்பட்டபடி இவர்கள் ஏதாவது கிராமிய வங்கிகளில் அல்லது மக்கள் வங்கிகளில் ஒரு சேமிப்புக் கணக்கை அல்லது நடைமுறை கணக்கை ஆரம்பித்து எமக்கு அறிவித்தால் அவர்களது ஒய்வூதியத்தை அத்தகையகணக்குகளில் வைப்புச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.''

[A-834]

இணுவில் கந்தன் மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று 13 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இருபத்தைந்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும் உற்சவத்தின் தேர்த்திருவிழாவும், தீர்த்தத்திருவிழாவும் அடுத்தமாதம் 7 ம், 8 ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

[வா]

இம்மாதம்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைக் கூட்டணிக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்று கருதப்படுகிறது.

இனப் பிரச்னைகான நிரந்தரத்தீர்வுகள், ஆலோசனைகள் யாவும் மாநாட்டின்போது அரசியல் கட்சிகளின் முன் வைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களும் ஆராயப்படுவதுடன், இது கால வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முழு விபரங்களும் இம் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த சர்வகட்சிமாநாட்டின் போது தீர்மானிக்கப்படும் விடயங்கள் யாவும் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் திரு. பேர்னாட் திலகரத்தினா மூலம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது

இதனிடையே இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே. என்.டிக்ஸிற், திருகோணமலை சம்பவம் தொடர்பாக தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருப்பதுடன் இனப்பிரச்னை தீர்வுக்கு துரிதகெதியில் செயல்படுத்துமாறும் ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனாவை வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

(ய-பி)

மின் தடை
இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-6-15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 K. V. மின்பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதனால் காலை 8-00 மணி முதல் மாலை 1-00வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும், கோண்டாவில், கொக்குவில், கோப்பாய் திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகலமின்பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்

இம்மின்தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

[A-834]

வல்வெட்டித்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வயது) என்னும்யுவதிகைதுண்டிக்கப்பட்டு இறந்தார். பிரசன்னா (5 வயது) சிறுவனும் பலியானவராவார்.

கடந்த 2 நாட்களாக இப் பகுதியில் நடைபெற்று முடிந்த தாக்குதலால் எண்ணிலடங்கா சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பெறுமதிவாய்ந்தபல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன

கடற்கரையோரமாக அமைந்துள்ள கப்பலுடையவர் கோவில சுவர்கள், மண்டபங்கள் பீரங்கி ஷெல்களால் துளைக்கப்பட்டு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலிருந்து 3, 4 மைல்களுக்குள் அமைந்துள்ள சுற்றுப் புறங்களிலும் பல வீடுகள் இத் தாக்குதல்களால் சேதமடைந்துள்ளன.''

நேற்று காலையிலும் மக்கள் முப்படைத் தாக்குதலை எதிர்பார்த்திருந்த பொழுதிலும் அப்படி எதுவும் நிகழவில்லை. இருந்தும் காலையில் சில்லுகள் பூட்டிய புதிய ரக ஹெலிகாப்டர் ஒன்று மூன்று தடவைகள் பறந்த பின் வந்த திசையில் சென்றது. இரண்டு நாட்களின் பின் திறக்கப்பட்டிருந்த கடைகள் சந்தையில் தமக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தவர்கள், கிலி கொண்டு பாதுகாப்புத்தேடி ஓடினர். ஆயினும் எதுவித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை.

கடந்த இரு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சு 30நிமிட நேரமும் இடம் பெற்றது.

இரண்டாவது சுற்றுவட்டப் பேச்சுக்களின்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி, வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீட் ஆகியோர் ஜனாதிபதியுடன் இருந்தார்கள். பேச்சுக்களின் விபரங்கள் எதுவும் வெளிவிக்கப்படவில்லை.

கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டன. மக்கள் அனைவரும் உயிர்தப்பினால் போதும் என்று ஓட்டமும் நடையுமாகச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்புரளியை யடுத்துக் குண்டுப் பரிசோதனைநிபுணர்களும், பாதுகாப்புப் படையினரும் குறிப்பிட்ட பகுதிகளுக்கு விரைந்து பலத்த தேடுதலில் ஈடுபட்டனர். இறுதியில் வெறும் பயமுறுத்தல் நடவடிக்கையே அதுவென அறிந்து கொள்ளப்பட்டது. [ய-பி]

வவனியா வரை-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவனியாவில் ஆயுதப்படை முகாமில் நேற்று நடைபெற்ற மாநாடொன்றில் பேசுகையிலேயே மேற்படி தகவலை அவர் தெரிவித்தார்.

இம் மாநாட்டுக்கு வவனியா அரசாங்க அதிபர் வவனியா இணைப்பதிகாரி உட்பட பல அரசாங்க ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

மன்னார்-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுகாயமடைந்தனர். இரு கவச வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன.

தமது தரப்பில் லெப்டினன்ட் தமிழரசுவரன் (அர்ச்சுனா) ஸ்தலத்திலேயே மரணமானார். மூவர் காயமுற்றார்

இவ்வாறு 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்க அரசியற்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6-30 மணி தொடக்கம் பிற்பகல்2-30மணி வரை இந்த நேரடி மோதல் இடம்பெற்றது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'நேற்றுக்காலை 6-30 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தள்ளாடி ராணுவ முகாமில் இருந்து 35 வாகனங்கள் சகித மாந்தை சந்தியை அடைந்த ராணுவத்தினர் மீது எமது வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடாத்தினர். இத் தாக்குதலின்போது இரு கவச வண்டிகள் 'ரொக்கட் லோஞ்சர்' மூலம் தகர்க்கப்பட்டன இச் சம்பவத்தின்போது 9 ராணுவத்திற்குமேல் பலியானதுடன் பலர் காயமடைந்தனர். இந்த நேரடித் தாக்குதலின்போது எமது தரப்பில் லெப்டினன்ட் தமிழரசுவரன் (அர்ச்சுனா) ஸ்தலத்திலேயே வீர மரணமடைந்தார். இத் தாக்குதலின்போதுஇரு பெரும் பர்களும், ஹெலியும் தாக்குதல் நிகழ்த்தின. இவற்றுக்கெதிராக எமது தரப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் அவை பின் வாங்கி விட்டன பின் வாங்கிய ராணுவத்தினர் தள்ளாடி முகாம் திரும்பியதும் ஆட்லறி, மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ளஅறிக்கையில்''ரோந்து சென்ற பாதுகாப்புப் படையினரை தீவிரவாதிகள் தாக்கியதால் ஒருவர் பலியானார், மூவர் காயமடைந்தனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னாரில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதலைத் தொடர்ந்து போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை. கடைகள் மூடப்பட்டிருந்தன. [மா]

"கடற்றொழிலாளர் படுகொலை;
அரசின் மோசமான செயலை அம்பலப்படுத்துகிறது"

[யாழ்ப்பாணம்]

கடலில் படுகொலை செய்யப்பட்ட மீன்பிடித்தொழிலாளர்கட்கு யாழ். வகுப்புத் தொழிலாளர் சங்கம் பிரசுர மூலம் அஞ்சலி செலுத்தியுள்ளது.

அப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது, மண்டைதீவில் கடந்த செவ்வாய்க் கிழமை மீன் பிடிக்கச்சென்ற 30க்கும் மேற்பட்ட மீன்பிடித் தொழிலாளர்கள் கடற்படையால் படுகொலை செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டிருக்கும் இன ஒடுக்குமுறையின் தொடர்ச்சி இது, கடலடங்கு சட்டத்தின் மூலம் மீனவர் வயிற்றிலடித்த அரசு இன்று தொழில் புரியச் சென்ற அப்பாவி மீனவர்களையே கொன்று குவித்தது. அதன் மோசமான செயலையே அம்பலப்படுத்துகிறது.

ஒரு தொழிலாளியின் உழைப்பின் கஷ்டம் அவன் சிந்தும் வியர்வையின் பெறுமதி அவனது அபிலாசைகள் அவனை எதிர்பார்த்து வீட்டில் ஆவலோடு காத்திருக்கும் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் சகோதரர்களின் நம்பிக்கைகளை இன்னுமொரு தொழிலாளியினால்தான் சரிவர உணர முடியும். கொலையுண்ட குருநகர் மீனவர்களின் துயரத்தை நாமறிவோம். அவர்களின் இழப்புக்களால் பரிதவிக்கும் குடும்பங்கள் அடையும் துயரத்தில் நாமும் இரண்டறக் கலக்கின்றோம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 13-6-86

"ஜனநாயகம் அழிக்கப்பட்டால் இலங்கையும், இந்தியாவும் வெகுவாகப் பாதிப்படையும்" பேராசிரியர் புல்ஜென்ஸ்

[கொழும்பு]

"இலங்கையில் ஜனநாயகம் ஒரு பாரதூரமான அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளது ஜனநாயகம் அழிக்கப்பட்டால் அதன் விளைவுகள் இலங்கையையும், இந்தியாவையும் வெகுவாகப் பாதிக்கும்" என்று பேராசிரியர் புல் ஜன்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் 'இந்தியா-சிறிலங்கா உதவிகள்' என்ற தலைப்பில் நடைபெற்ற சொற்பொழிவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் பல் ஜன்ஸ் தொடர்ந்து பேசியதாவது: "இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையில் தேசியரீதியாக இணக்கம் ஏற்பட்டால் அதுதமிழ்த்தீவிரவாதிகளுக்கும், இந்திய அரசாங்கத்துற்கும், பொதுவாக உலகத்திற்கும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் நாம் தொடர்ந்து பிரிந்திருந்தால் உலகம் நம்மை மதிக்காது."

"இனப் பிரச்னைக்கு தீர்வொன்றைக் காண்பதற்காகத் தென் மற்றும் வட இந்தியாவுடன் இலங்கை நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சோவியத் யூனியன் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதால் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சோவியத் விஜயம் இன்றைய பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் உறுதியான அடித்தளமாகும். அண்மையில் இலங்கையின் தேயிலை விலை வீழ்ச்சியடைவதற்கு இந்தியாவின் அதிசுப்படியான தேயிலைஏற்று மதியே காரணமாகும்.

இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியாவுக்கும்பெரியதொரு 'கெடு இருக்கின்றதென்பதை இது காட்டுகிறது. நாம் இந்தியாவை நஷ்டமடையச் செய்ய முடியாது. இந்தியா நம்மை நசுக்கமுடியும்.

இலங்கை இன்னும் ஒரு சில மாதங்களில் பாரதூரமான ஒரு காலகட்டத்தினைச் சந்திக்கவேண்டிவரும். இந்திய-இலங்கைத் தலைவர்களுக்கிடையில் சில பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக உறுதியான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்" என்றும் அவர் தெரிவித்தார். [து]

500 துருப்புகளுடன் புதிய இராணுவ முகாம்

[வவனியா]

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வவனியா பொலிஸ் நிலையத்தின் முன்பாக புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய இராணுவ முகாமில் சுமார் 500 ஆயுதப்படையினர் முகாமிட்டுள்ளனர். (வா)

நீதிமன்றம் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நீதிவான் நீதிமன்றம் இன்றுமுதல் தற்காலிகமாக யாழ் மேல் நீதிமன்றக் கட்டிடத்தில் இயங்கவுள்ளது.

யாழ் நீதிவான் நீதிமன்றத்தின் சில அமர்வுகள் இன்று யாழ் மேல் நீதிமன்றக் கட்டிடத்தில் இடம்பெறவுள்ளன

தற்காலிகமாகச் சிறிது காலத்துக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் மேல் நீதிமன்றக் கட்டிடத்தில் இயங்கிய பின்னர் மீண்டும் பழைய கட்டிடத்தில் அது இயங்கும்.

தற்போது 222ம் இலக்கம் பருத்தித்துறை வீதியில் தற்காலிகமாக இயங்கிவரும் நீதிவான் நீதிமன்றக் காரியாலயமும், மேல் நீதிமன்றக் காரியாலயமும் இடமாற்றம் செய்யப்படும்வரை அங்கேயே அவை தொடர்ந்து இயங்குமெனத் தெரிகிறது. [வா]

இராணுவ பாதுகாப்பில் இருந்தவர் தப்பியோட்டம்?

[வவனியா]

கடந்த 3ந் திகதி வவனியா வாடி வீட்டுக்கருகில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வவனியா கமநலச்சேவை இலாகா எழுதுவினைஞர் பி பத்மநாதன் தப்பி ஓடிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் பற்றிய விபரங்களை அறிவதற்காக இவரது பெற்றோர்கள் வவனியா இராணுவ முகாமுக்கு சென்றிருந்தனர். அப்பொழுதே அவர்களிடம் இராணுவத்தினரால் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பெற்றோர்கள் வவனியா பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர். [ரா]

குண்டுவெடிப்பு ஒருவர் பலி

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை கெயிட் டித்தியேட்டருக்கருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் முப்பது பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இறந்தவர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிசார் கைதுசெய்துள்ளதாகவும் கூறப்பட்டது. (ரா)

பீரங்கிவேட்டுக்களால் மக்கள் அச்சம்

[மாவிட்டபுரம்]

கடற்பகுதியில் அடிக்கடி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதால் காங்கேசன்துறை சிரிமலை, சேந்தாங்குளம், மாதகல் கடற்கரையோரங்களில் வதியும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்

மேற்படி கடற்கரையோரங்களில் கடற்படை பீரங்கிப் படகுள் ரோந்து சுற்றி மருவதுடன் அடிக்கடி அவற்றிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்படுவதாக கூறப்படுகிறது.

இம் மாதம் 10ம் திகதி இரவு மாதகல் கடற்பகுதியில் பலத்த பீரங்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன இதன் காரணமாக கரையோர மக்கள் பெரிதும் அச்சம் கொண்டுள்ளனர். (க)

மண்டைதீவு அகதிக் குடும்பங்களுக்கு விசேட உணவு வசதி

அரச அதிபர் ஏற்பாடு

[மண்டைதீவு]

மண்டைதீவில் இருந்து அகதிகளாகக் குடிபெயர்ந்துள்ள 800 குடும்பங்களுக்கு விஷேட உதவியாக உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செய்துள்ளார்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி. மைதிலி - சோமசுந்தரம், மண்டைதீவு கிராம சேவையாளர் ஆகியோர் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு அல்லைப்பிட்டியில் தங்கியுள்ள மண்டைதீவு அகதிகளுடன் நேற்று கலந்துரையாடினார்கள்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மண்டைதீவுப் பகுதியில் உள்ள பல பொது ஸ்தாபனங்களின் பிரதி நிதிகளும் இவ்விடயமாக தொடர்பு கொண்டுள்ளன.

மண்டைதீவுக் கிராமத்தைச் சேர்ந்த மேற்படி குடும்பங்கள் அல்லைப்பிட்டியிலுள்ள பராசக்தி வித்தியாலயத்திலும், சென். பிலிப்ஸ், சென். ஜோன்ஸ் தேவாலயங்களிலும் முகாமிட்டுள்ளன.

இந்த அகதிகளுக்கு ஒரு வார காலத்திற்கு இலவச உணவு வழங்குவதற்கான உத்தரவை அரசாங்க அதிபர் வழங்கியுள்ளார்.

இதுவரை அகதிகளுக்கு உணவு, உதவிகள் வழங்கி ஆதரவு கொடுத்த அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்களுக்கு அகதிகள் சார்பில் ஸ்தாபன ரீதியான நன்றிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முட்டை விலை அதிகரிப்பு

[நெடுந்தீவு]

கோழிமுட்டை விலை ரூபா மூன்றாக அதிகரித்துள்ளது யாழ். நகரில் இவ்வளவு அதிக விலை ஒருபோதும் இருந்ததில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துச்சீர்இன்மையால் கோழித்தீன் தட்டுப்பாடே இந்த அதிகரிப்பிற்குக் காரணம் என்றும் அறியப்படுகின்றது.

தந்திக்கம்பங்களில் சடலங்கள்

[வவனியா]

தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்கள் வெவ்வேறு தந்திக்கம்பங்களில் எதிரெதிராகக்கட்டப்பட்டிருந்தன.

முள்ளியவளையில் நேற்று முன்தினம் இத்தண்டனைக்குள்ளான இருவரும் வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இத்தண்டனைக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லையென்றும் கூறப்படுகிறது. [ரா]

சைக்கிள் சேதம் ஒருவர் கைது

[மாவிட்டபுரம்]

அதிகாலையில் வீதி மின்பல்புகளை அணைக்கச்சென்ற மின்சாரப்பகுதி ஊழியர் ஒருவரின் சைக்கிளை இராணுவத்தினர் நொருக்கிச் சேதப்படுத்தினர். தொடர்ந்து ஊறணியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று ஊறணி, மயிலிட்டி பகுதிகளில் இச்சம்பவங்கள் நடந்தன.

நேற்று அதிகாலை 5-30மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து பலாலி நோக்கி இராணுவத்தினர் சென்றனர். அச்சமயம் வதி மின்பல்புகளை அணைக்கச்சென்ற காங்கேசன்துறை உபஅலுவலகமின்சாரப் பகுதி ஊழியரான காசிநாதன் என்பவர் சைக்கிளைப்போட்டு விட்டுஓடவே இராணுவத்தினர் அச்சைக்கிளை சேதப்படுத்திவிட்டுச் சென்றனர்.

பின்னர் காலை 10-30மணியளவில் பலாலியில் இருந்து காங்கேசன்துறை நோக்கி இராணுவம் வந்தசமயம் ஊறணியில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவரை சைதுசெய்து மோட்டார் சைக்கினையும் தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றனர்.

மரண அறிவித்தல்

ஜோன் தம்பிராசா

[இளைப்பாறிய புகையிரத நிலைய பிரதம அதிபர், யாழ்ப்பாணம்]

உடுவிலைச் சேர்ந்த, இளைப்பாறிய யாழ்ப்பாண புகையிரதநிலைய பிரதம அதிபர் ஜோன் தம்பிராசா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற புறுடன்ஸ் இன்பமலரின் அன்புக்கணவரும். மோர்கன் [Hotel Oberoi, Colombo], வசந்தி [Germany], மனோஜி ஆகியோரின் அன்புத்தந்தையும், பீற்றர் ஜெயறட்ணம் [Germany] அவர்களின் மாமனாருமாவார். அன்னாரின் ஆத்மசாந்திக்கான இறுதி ஆராதனைகள் 'வயலற் கொட்டேஜ்' உடுவில் இல்லத்தில் 14 06-86 காலை 8-30மணியளவில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் தெல்லிப்பழை கிறீஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். [C-2856]

தமிழரசுவரன் (அர்ஜுனா)

இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர் காசிப்பிள்ளை சதாசிவம், நாகேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், மகேஸ்வரன் (U. K.), லோகேஸ்வரன் (U. K.), சத்தியவாகேஸ்வரன் (U. K.), மங்களேஸ்வரன் (U. K.), திருக்கேதீஸ்வரன் (U. K.), திலகலட்சுமி (வேம்படி மகளிர் கல்லூரி), நவலட்சுமி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரருமான தமிழரசுவரன் (அர்ஜுனா) வீரமரணமெய்திவிட்டார். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

46, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். (C 2854)

சின்னத்தம்பி கந்தையா

சின்னத்தம்பி கந்தையா (மலாயன் பென்சனியர்) 12-06-86 இல் காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், தங்கமுத்து, செல்வராஜா (மலேசியா), மனோன்மணி (சிங்கப்பூர்), தங்கமணி (மலேசியா), தேவகி (நூலகம், யாழ் பல்கலைக்கழகம்), துரைச்சாமி (கனடா), நவமணி (மலேசியா), துர்க்காலக்சுமி (துட்கா) பெரியபுலம் மகா வித்தியாலயம், நவரத்தினம் (கனடா) ஆகியோரின் அருமைத்தகப்பனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 13 06-86 வெள்ளிக்கிழமைகாலை 10 மணிக்கு சாமபலோடை மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: M. தர்மபாலன்,
சயம்பு வீதி, வலந்தலை வடக்கு,
காரைநகர்.
(C 2838)

குணரத்தினம் சிவபாதம்

(இலங்கைவங்கி, பருத்தித்துறை)

குருவில்லம், செட்டித்தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த கு சிவபாதம் காலமாகி விட்டார். அன்னார் கமலநாயகியின் அன்புக் கணவரும், சுகனியா, அனுசியா, அகலிகாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கு கணபதிப்பிள்ளை, மா. புஸ்பவதி, கு சொக்கலிங்கம் (சில்வகிறவுண், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், க பொன்னம்பலம் (இளைப்பாறிய யாழ் மாவட்டக் கல்வி அதிகாரி) க. அருளானந்தம் (விசேட சேவை உத்தியோத்கதர்), கு.சிவகுமாரி [அரசினர் வைத்தியசாலை], பொ. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 6 86 பிற்பகல் 4.30 க்கு பருத்தித்துறையில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

'குரு இல்லம்', பருத்தித்துறை.
தகவல்:
க. அருளானந்தம்.
[C-2835]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org